


இந்திய வரலாற்றில் முதன்முறையாக சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஒருவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான நடைமுறைகளை நாடாளுமன்றம் சென்ற வாரம் தொடங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டைச் சேர்ந்தவரான நீதிபதி வி.ராமசாமி சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக ஆவதற்கு முன்பு பஞ்சாப்-அரியானா உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்தபோது செய்த முறைகேடுகளையடுத்து அவரை நீக்கக் கோரி முன்னாள் நிதியமைச்சர் பேராசிரியர் மதுதந்தவதே உட்பட 108 எம்.பி-க்கள் மக்களவையில் தீர்மானம் கொண்டுவந்துள்ளனர்.

இந்தத் தீர்மானத்தை விவாதத்துக்கு ஏற்றுக்கொண்டு சபாநாயகர் ரபி ராய், சட்டப்படியிலான நடவடிக்கைகளைத் தொடங்க உத்தரவிட்டிருக்கிறார். நீதிபதி ராமசாமியைப் பதவியிலிருந்து நீக்கக் கோருவதற்கான அடிப்படைகளை ஆராய்வதற்கு மூவர் குழு ஒன்றை சபாநாயகர் அமைத்துள்ளார். தற்போது சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக உள்ள பி.பி. சாவந்த், பம்பாய் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பி.டி. தேசாய், முன்னாள் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஓ. சின்னப்ப ரெட்டி ஆகியோர் இக்குழுவில் உள்ளனர்.

உயர்நீதிமன்ற, சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளைப் பதவியிலிருந்து ஜனாதிபதி நீக்கக் கோரி எம்.பி-க்கள் தீர்மானம் தருவதானால், குறைந்தபட்சம் 100 மக்களவை எம்.பி-க்கள் அதில் கையெழுத்திட வேண்டும். மாநிலங்களவையில் தீர்மானம் தரப்பட்டால் 50 எம்.பிக்கள் ஆதரவு தேவை.

தீர்மானத்தை அவைத் தலைவர் விசாரிக்க ஏற்றதும், குழுவை நியமிப்பார். குழுவின் அறிக்கை 'நீதிபதி குற்றவாளி' என்று கருதினால், அவையில் தீர்மானம் விவாதிக்கப்படும். மொத்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் கலந்துகொண்டு வாக்களிக்க வேண்டும். பெரும்பான்மை வாக்குகளின், அடிப்படையில் தீர்மானம் நிறைவேற்றப்படும். தீர்மானம் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டதும் அவர் நீதிபதியை நீக்க உத்தரவிடுவார்.

விசாரணைக் குழுவின் அறிக்கை, 'நீதிபதி குற்றவாளியல்ல' என்று முடிவு தெரிவித்தால், தீர்மானம் விவாதத்துக்கே எடுக்கப்படாமல் காலாவதியாகிவிடும். இதுதான் சட்டப்படியிலான நடைமுறை.

இப்போது மக்களவை கலைக்கப்பட்டுவிட்டதால் சபாநாயகர் நியமித்த குழு பாதிக்கப்படாது என்பது சட்டநிபுணர்களின் கருத்தாகும்.

மூவர் குழு நியமன உத்தரவை அவையில் சபாநாயகர் அறிவிக்கும்போதே 108 எம்.பி-க்கள் தந்துள்ள தீர்மானம் (Motion) காலாவதியாகாமல் தொடர்ந்து நீடிக்கும் என்றும் அறிவித்திருக்கிறார். தவிர, மூவர் குழு என்பது parliamentary committee அல்ல. அதாவது எம்.பி-க்கள் அடங்கிய குழு அல்ல. அது Statutory committee. அரசியல் சட்டத்தின் கீழ் அமைந்த குழு. அது காலாவதியாகாது என்று சட்ட நிபுணர் 'நாரிமன்' கருத்து தெரிவித்துள்ளார்.

எதற்காக ஒரு நீதிபதியைப் பதவியிலிருந்து விலக்கலாம்?

'மிஸ்பிஹேவியர்' அல்லது 'இன்கெபாசிட்டி' என்கிறது சட்டம்.

நீதிபதி வி. ராமசாமியை 'மிஸ்பிஹேவியரு'க்காகப் பதவியிலிருந்து நீக்கும்படி கோரி 108 எம்.பி-க்கள் வழங்கியுள்ள தீர்மானமும் விளக்கமும் மொத்தமாக 140 பக்கங்கள் உள்ளன. இதில் பதினோரு முக்கிய குற்றச் சாட்டுகள்... ஏற்கெனவே ஜூனியர் விகடனில் (11.4.90, 20.6.90, 26.12.90 இதழ்களில்) இந்தக் குற்றச்சாட்டுகள் பற்றிய தணிக்கைக் குறிப்பு விவரங்களும் செய்திகளும் வெளியிடப்பட்டன. இப்போது அரியானா அக்கவுண்டண்ட் ஜெனரல் (ஆடிட்) அறிக்கையும் வந்துள்ளது.

இப்போது எம்.பி-க்கள் வழங்கியுள்ள 140 பக்கக் குறிப்பிலிருந்து மேலும் பல சுவையான தகவல்கள் தெரிய வந்துள்ளன.

தரை விரிப்புகள் வாங்கியதில் 'போர்ஜரி' செய்யப்பட்டதன் ஆதாரங்கள் இப்போது உள்ளன. 17.2.89-ல் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய்க்கு விரிப்புகள் ராமசாமியின் வீட்டுக்காக சண்டிகரில் வாங்கப்பட்டன.

கிருஷ்ணா கார்ப்பெட்ஸ் என்ற கடையிலிருந்து இது வாங்கப்பட்ட அதே சமயம் மூன்று கொட்டேஷன்கள் பெறப்பட்டதாகக் காட்டியிருக்கிறார்கள்.

கிருஷ்ணா தவிர, காட்டேஜ் எம்போரியம், ஹேண்ட்லூம் எம்போரியம் என்ற கடைகளின் லெட்டர் ஹெட்டில் கொட்டேஷன்கள் உள்ளன.

நடந்துள்ள மோசடி இதுதான். காட்டேஜ் எம்போரியம் என்ற கடையே 7.2.89-ல் இல்லை. அந்தக் கடை மூடப்பட்டு அந்த இடம் கிருஷ்ணா கார்ப்பெட்ஸ் கம்பெனியின் கோடௌனாக இருந்து வருகிறது. ஹேண்ட்லூம் எம்போரியம் என்ற கம்பெனி தாங்கள் எந்த கொட்டேஷனும் தரவில்லை என்றும் தங்கள் லெட்டர்-ஹெட்டில் குறிப்பிட்டுள்ள மோடி விரிப்புகளைத் தாங்கள் விற்பதே கிடையாது என்றும் கூறிவிட்டது. எனவே அந்த கொட்டேஷனும் போர்ஜரிதான்.

எல்லாவற்றுக்கும் மேலாக மூன்று கொட்டேஷன்களிலும் **7.2.89** என்ற தேதி ஒரே கையெழுத்தில் இருக்கிறது. இதற்கும் மேல் கொட்டேஷன் கொடுத்த தேதியும் **7.2.89.** விரிப்பு வாங்கி அதற்கான பில் தேதியும் **7.2.89.** அதற்கு ராமசாமி சாங்ஷன் செய்ததும் அதே **7.2.89!**

இன்னொரு விவகாரமான வெள்ளிச் செங்கோல் பிரச்னையில் **25** வெள்ளிச் செங்கோல்களுக்கு மூன்று லட்சத்து அறுபது ஆயிரம் ரூபாய் தரப்பட்டுள்ளது. 'ஒரு உயர்நீதிமன்றத்தின் கௌரவம் பற்றிய விஷயத்தில் விலை, செலவுகளைப் பார்க்கக்கூடாது' என்றும் 'பாரம்பரியம் மிகுந்த சென்னை உயர்நீதிமன்ற அனுபவத்தை பஞ்சாப் நீதிமன்றத்துக்கும் தர' தான் முற்பட்டதாகவும் நீதிபதி ராமசாமி தன் பதிலில் எழுதியிருக்கிறார்.

உண்மையில் வெள்ளிச்செங்கோலின் விலை மிகைப்படுத்தப்பட்டது என்று தணிக்கைக் குறிப்பு சுட்டிக் காட்டியிருக்கிறது. பஞ்சாப் உயர்நீதிமன்றம் ஒரு செங்கோலுக்கு பதின்மூன்று ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் (வரிகள் தனி) வீதம் கொடுத்து செங்கோல்களை வாங்கியது. ஆனால், இரண்டாண்டுகள் கழித்து அதே கம்பெனியிடம் சென்னை உயர்நீதிமன்றம் இரண்டாயிரம் ரூபாய் விலையில் செங்கோல் வாங்கியிருக்கிறது! நீதிமன்ற கௌரவத்தை **2000** ரூபாய் செங்கோல் வாங்கியே நிலைநிறுத்தியிருக்கலாம் என்று தணிக்கை அதிகாரி தெரிவித்திருக்கிறார்!

நீதிபதி ராமசாமியைப் பதவி நீக்கம் செய்யக் கோரி வழக்கறிஞர்களின் கிளர்ச்சி ஓராண்டு காலமாக நடந்து வருகிறது. தணிக்கை அறிக்கை விவரங்கள் பத்திரிகைகளில் வெளியானதையடுத்து கடந்த ஜூலையில் நீதிபதி ராமசாமியை விடுமுறையில் செல்லும்படி தலைமை நீதிபதி கேட்டுக் கொண்டார். பிறகு நவம்பரில் வி.பி. சிங் அரசு கவிழ்ந்து காங்கிரஸ் ஆதரவுடன் சந்திரசேகர் அரசு அமைந்தது. டிசம்பர் மாதத்தில்

சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் குழுவின் விசாரணைப்படி, 'ராமசாமி மீதான - புகார்களுக்கும் அவர் நீதிபரிபாலனம் - செய்வதற்கும் தொடர்பு இல்லை' என்று முடிவு செய்யப்பட்டதால் மீண்டும் ராமசாமிக்கு நீதிமன்ற அலுவல்கள் தரப்பட்டன.

இதை எதிர்த்து, சென்ற மாதம் சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர்கள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியது. ராமசாமியின் கோர்ட்டைப் புறக்கணிக்கத் தீர்மானித்தது. அவர் விலக வேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும் என்றும் கோரியது. சென்ற வாரம் சபாநாயகரின் உத்தரவு வந்திருக்கிறது.

இதைப் பற்றியெல்லாம் நீதிபதி ராமசாமியின் கருத்து என்ன? "நான் பத்திரிகைகளுடன் பேச விரும்பவில்லை" என்று அவர் கூறியிருக்கிறார்!

**ஜூனியர் விகடன்**
**20-03-1991**